Registered as a News Pape? பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 22 (07-12-1992) திங்கட்கிழமை ஓசை 293

## பழைய வினாத்தாள்கள் விநியோகத்தில் இனப்பாகுபாடு

பொதுப் பரீட்சைகளின் பழைய வினாத்தாள்களை பரீட்சைத் திணைக்களம் அச்சடித்து மாணவர்களுக்கு விற்பனை செய்வதிலும் இனப் பாகுபாடு காட்டப் படுகின்றது. க.பொ.த. சாதாரண பரீட்சையின் சிங்கள மொழிமூலமான வினாத் தாள்கள் அச்சடித்துப் பல மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால் தமிழ்மொழி மூல வினாத்தாள்கள் ஒரு பாடமேனும் இன்று வரை அச்சடிககப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது பரீட்சைத் திணைக்களத்தின் இந்த நடவடிக்கை ஒரு பார பட்சமான நடவடிக்கைமாத்திரமல்ல கல்வியில் தமிழ்மாணவர்களுக்கு சமவாய்ப்பு மறுக்கப்படும் ஒரு நடவடிக்கை (4 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவில் அரசியல் கொந்தளிப்பு நிலை

# இந்து-முஸ்லிம் கலவரம் வெடிக்கும் அபாயம்

புலமைப் பரிசிலில் சித்தியடைந்தோர்

## ஆண்டு ஆறு அனுமதிக்கு உடன் விண்ணப்பிக்கவும்

தற்போது வெளியாகியுள்ள ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் தாம் விரும்பும் யாழ். மாவட்டப் பாடசாலை க்கு ஆண்டு - 6 அனுமதிக்காக எதிர்வரும் 11 ஆம திகதிக்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டுமென கல்வித்திணைக் களம் அறிவித்துள்ளது. இந்த அனுமதிகளை நிர்ணயித்தபின் னர் பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலையில் உள்ள மீதி வெற்றிட விபரங் களை கல்விப்பணிப்பாளருக்கு இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அறி விக்குமாறும் கோரப்பட்டுள் ளது.

இவ்வெற்றிடங்களை மாவ ட்ட ரீதியில் நடாத்தப்பெற உள்ள பரீட்சைப் பெறுபேறு களின் அடிப்படையில் நிரப்பப் படும். மாவட்டப் பரீட்சைக் கான திகதி பின்னர் அறிவிக் கப்படும் என மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

## பரீட்சை நிலையம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இன்று ஆரம்பமாக இருக் கும் க.பொ த. (சா/த) பரீட்சையின் பரீட்சை நிலை யங்கள் சில மாற்றம் செய் யப்பட்டுள்ளதாக யாழ். கல் வித்திணைக்களம் அறிவித்துள் ளது. இதன் விபரம் வருமாறு:

யாழ். நவாலி மகாவித்தி யாலய மண்டபம் 02, 03 என் பவற்றில் மண்டபம் 02 யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபம் 03 இற்கும், மண்ட பம் 03 யாழ் ஆனைக்கோ ட்டை றோ. க. வித்தியாலய த்திற்கும், யாழ். சன்மார்க்க வித்தியாலயம், யாழ். சென் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பாபர் மசூதி மீது இந்துக்கள் தாக்கு உத்தரப்பிரதேச அரசு ராஜினாமா

(டில்லி)

அயோத்தியிலுள்ள பாபர் மசூதியை இந்து அடிப்படைவாதக் கட்சியான விஷ்வ ஹிந்துப் பரிசத் தொண்டர்கள் இடித்து நிர்மூலமாககியதைத் தொடர்ந்து இந்தியாவில் பெரும் அரசியற் கொந்தளிப்பு நிலை உருவாகியுள்ளது. இதேவேளை மசூதி இடிக்கப்பட் டதன் எதிரொலியாக இந்தியாவின் பல பாகங்களிலும் இந்து - முஸ்லிம் கலவரம் வெடிக கலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இச் சம்பவத்தின் விளைவாக உத்த ரப் பிரதேசத்தில் ஆட்சியிலிருந்த திரு. கல்யாண்சிங் தலைமையிலான பாரதீய ஜனதாக் கட்சி அரசாங்கம பதவி விலகியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அயோத்தியில் ராமர் ஆலய த்தைக் கட்டும் நிகழ்ச்சிகளை நடாத்த விஸ்வ ஹிந்து பரி சத் [கூட்டிய கூட்டமொன் றில் கலந்து கொண்ட இந் துக்கள் தடைகளைக் தாண் டிச் சென்று பள்ளிவாசலின் மூன்று மினரெட்டுக்களையும் [கோபுரங்கள்] இடித்துத் தகர்த்துள்ளனர்

இதனைத் தொடர்ந்து உத் தரப் பிரதேசத்தில் பாரதீய ஜனதாக் கட்சி கல்யாண் சிங் அரசு பதவி விலகியது. சட் டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்கத் தவறியதற்கா கவே முதலமைச்சர் கல்யாண் சிங் நேற்று மாநில ஆளுநர் சத்தியநாராயணரெட்டியிடம் பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பித்தார் என்று சொல் லப்படுகிறது. அவரது ராஜி னாமாவைத் தொடர்ந்து உத் தரப்பிரதேசத்தில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட் டுள்ளதுடன் சட்டசபையும் [4 ஆம் பக்கம் பார்க்க]

# தெற்கில் புலிகள் வேட்டை தீவிரம்

# ஒரு நாளில் 500 பேர் கைது

தென் இலங்கை நகரங்க ளில் புலிகளின் ஊடுருவலைத் தடுக்க புதிய தேடுதல் நடவ டிக்கை ஒன்றைப் பாதுகாப் புப் படைகள் ஆரம்பித்துள் ளன.

இம் மாதம் 4 ஆம் திகதி நள்ளிரவு முடிவடைந்த 24 மணிநேரத்தில் 500 தமிழர் கைது செய்யட்டடுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரி விக்கின்றன. கேகாலை, கண்டி, கம்பஹா, நுவரெலியா, அநு ராதபுரம், காலி, கொழும்பு, சிலாபம், புத்தளம், நீர் கொழும்பு, பதுளை, மாத் தறை, மாத்தளை, மகாரகம, பாணந்துறை, மொறட்டுவ

இதே வேளை விடுதலைப் புலிகள் மகளிர் படைப்பிரி வில் சிலர் திடீர்த் தாக்கு தலை நடத்தும் நோக்கத்து டன் கண்டி நகரில் ஊடுருவி ருப்பதாகத் தமக்குத் தகவல்

## மத்திய அமைச்சரவை உடனடியாக கூடியது

[டில்லி]

உத்தரப் பிரதேச நெருக்கடி யைத் தொடர்ந்து டில்லியில் மத்திய அமைச்சரவை உடன டியாக கூடியது.

இந்து - முஸ்லிம் மக்கள் வாழும் பகுதியில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது பற்றி அமைச்சரவையில் ஆலோசிக்கப்பட்டது. அத்து டன் உத்தரப் பிரதேசச் சட்ட சபையைக் கலைத்து, ஜனாதி பதி ஆட்சியைக் அங்கு ஏற் படுத்துவ தென்ற முடிவும்

## உத்தரப்பிரதேச அரசு படையை அனுமதிக்கவில்லை

[டில்லி]

படைகள் மாநில அரசுக்கு உத

களம் அறிவித்துள்ளது. இந்த அனுமதிகளை நிர்ணயித்தபின்னர் பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலையில் உள்ள மீதி வெற்றிட விபரங்களின் அடிப்படையில் நிரப்பப்படும். மாவட்டப் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

...ட்டை றோ. க. வித்தியாலய த்திறகும், யாழ். சன்மார்க்க வித்தியாலயம், யாழ். சென்...

(4 ஆம் பக்கம் பார்க்க)

...கட்சி அரசாங்கம பதவி விலகியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அயோத்தியில் ராமர் ஆலயத்தைக் கட்டும் நிகழ்ச்சிகளை நடாத்த விஸ்வ ஹிந்து பரிசத் [கூட்டிய கூட்டமொன்றில் கலந்து கொண்ட இந்துக்கள் தடைகளைக் தாண்டிச் சென்று பள்ளிவாசலின் மூன்று மினரெட்டுக்களையும் [கோபுரங்கள்] இடித்துத் தகர்த்துள்ளனர்

இதனைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசத்தில் பாரதீய ஜனதாக் கட்சி கல்யாண் சிங் அரசு பதவி விலகியது. சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்கத் தவறியதற்காக வே முதலமைச்சர் கல்யாண் சிங் நேற்று மாநில ஆளுநர் சத்தியநாராயணரெட்டியிடம் பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பித்தார் என்று சொல்லப்படுகிறது. அவரது ராஜினாமாவைத் தொடர்ந்து உத்தரப்பிரதேசத்தில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன் சட்டசபையும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# தெற்கில் புலிகள் வேட்டை தீவிரம்

# ஒரு நாளில் 500 பேர் கைது

தென் இலங்கை நகரங்களில் புலிகளின் ஊடுருவலைத் தடுக்க புதிய தேடுதல் நடவடிக்கை ஒன்றைப் பாதுகாப்புப் படைகள் ஆரம்பித்துள்ளன.

இம் மாதம் 4 ஆம் திகதி நள்ளிரவு முடிவடைந்த 24 மணிநேரத்தில் 500 தமிழர் கைது செய்யட்டடுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. கேகாலை, கண்டி, கம்பஹா, நுவரெலியா, அநுராதபுரம், காலி, கொழும்பு, சிலாபம், புத்தளம், நீர்கொழும்பு, பதுளை, மாத்தறை, மாத்தளை, மகாரகம, பாணந்துறை, மொறட்டுவ ஆகிய நகரங்களிலும், மற்றும் கொழும்பின் புறநகரப் பகுதியான வத்தளை, களனியா ஆகிய இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். தேடுதலைப் பொலிஸார் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை விடுதலைப் புலிகள் மகளிர் படைப்பிரிவில் சிலர் திடீர்த் தாக்குதலை நடத்தும் நோக்கத்துடன் கண்டி நகரில் ஊடுருவியிருப்பதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகப் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

வெளி நாடுகளில் வேலை வாய்ப்புத் தேடும் நோக்கத்தில் தாம் கொழும்பு வந்ததாக கைதாகியவர்களில் பலர் தமது வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

## 38 தமிழ் இளைஞர் கொள்ளுப்பிட்டியில் கைது

(கொழும்பு)

கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் பொலிசாரால் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படுவது தொடர்ந்தும் நடைபெறுகிறது.

கொள்ளுப்பிட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை மட்டும் சுமார் 28 தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை முதல்நாளான வியாழக்கிழமை சுமார் பத்து தமிழ் இளைஞர்கள் இதே பகுதியில் இருந்து பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் பொலிசாரினால் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

## நீர்கொழும்புப் பகுதியில் 204 தமிழர் கைது

(கொழும்பு)

நீர்கொழும்புப் பகுதியில் கடந்த இருவாரகாலப் பகுதியில் மட்டும் பத்துப் பெண்கள் உட்பட சுமார் 204 தமிழர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பில் உள்ள குடாப்பாடு என்ற இடத்திலும் மற்றும் கடற்கரை வீதியிலும் உள்ள தனியார் வீடுகள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றில் இருந்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் ஆரம்பத்தில் கொழும்பில் தங்கியிருந்தனர் என்றும் கொழும்பில் ஏற்பட்ட பதற்றத்தைத் தொடர்ந்து நீர்கொழும்புப் பகுதிக்கு இவர்கள் இடம் பெயர்ந்துவந்தவர்கள் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

## தாழங்குடா கிராமத்தில் 22 தமிழ் இளைஞர் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தாழங்குடா கிராமத்தை சுற்றிவளைத்து தேடுதல் நடாத்திய சிறிலங்கா இராணுவத்தினர் சுமார் 22 தமிழர்களைக் கைது செய்தனர்.

கடந்த வியாழக்கிழமை அதிகாலை 5 30 மணியளவில் மேற்படி கிராமத்துக்கு விரைந்து வந்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் அக்கிராமத்தைச் சுற்றிவளைத்தனர். இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் அங்குள்ள அனைத்து வீடுகளுக்குள்ளும் புகுந்து தேடுதல் நடாத்தினர். இத் தேடுதலின் போது சுமார் 22 தமிழர்களை கைதுசெய்துள்ளனர் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் ஆரையம்பதி இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

## பண்டாரவளையில் புலிகள் வதந்தியால் பெரும்பரபரப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் பண்டாரவளைக்கும் வந்து விட்டார்கள் என்று பரவிய வதந்தியை அடுத்து பண்டாரவளைநகரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சில தினங்களுக்கு முன்னர் பண்டாரவளை நகரம் திடீரென அல்லோல கல்லோலப்பட்டது நகரின் நாலாபக்கமும் உள்ள வீதிகள் மூடப்பட்டு கடும் சோதனை நடவடிக்கைகளை பொலிசார் மேற்கொண்டனர். நகரம் பொலிசாரால் சுற்றி வளைக்கப்பட்டு பெருந்தொகையானோர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். வீதிகள் எங்கும் ஒரேபரபரப்பு. இவ்வாறு ஏற்பட்ட பரபரப்புக்கு காரணம் புரியாமல் பலர் விழித்துக் கொண்டனர். ஒருவரை ஒருவர் வினவிக் கொண்டனர். இறுதியில் விடயம் அனைவருக்கும் புரிந்தது.

## வடபகுதி தபால்கள் தீவிரசோதனை 700 பொதிகள் கொழும்பில் தேக்கம்

(கொழும்பு)

வடபகுதிக்கான சுமார் 700 இற்கும் அதிகமான தபால் பொதிகள் கொழும்பில் தேங்கிக் கிடக்கின்றன.

இத்தபால் பொதிகளைப் படையினர் தீவிர சோதனைக்குட்படுத்துவதால் இவற்றை வடபகுதிக்கு அனுப்பி வைப்பதில் நீண்ட கால தாமதம் தோன்றியிருக்கிறது. வடபகுதிக்கான கடிதங்களை படையினர் ஒவ்வொன்றாகத் திறந்து பார்த்து வருகின்றனர்

கடந்த அக்டோபர் மாதம் 16ஆம் திகதிக்குப் பின்னர் சேகரிக்கப்பட்ட கடிதங்களில் சுமார் 61 பொதிகள் மட்டுமே இதுவரை கப்பல் மூலம் வ பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது

கடந்த அகடோபர் மாதம் முதல் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள் அனைத்தும் மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் வைத்து கடற்படையினரால் தீவிர சோதனையிடப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## உத்தரப்பிரதேச அரசு படையை அனுமதிக்கவில்லை

[டில்லி]

மத்திய அரசின் படைகள் உத்தரப் பிரதேசத்துக்கு அனுப்பப் படுவதை உத்தரப் பிரதேச அரசு அனுமதிக்கவில்லை. இந்திய அரசியல் சட்டப்படி சட்டமும், ஒழுங்கும் மாநிலங்களின் அதிகாரத்தின் உள்ளது. அதனால் மதத்திய ரிசேர்வ் பொலிஸ் படை நடவடிக்கை எடுக்கவில்லைஎன்று மத்திய உள்துறை அமைச்சர் எம். எஸ் யேக்கப் கூறினார்.

அயோத்தியாவுக்கு ஆறு அல்லது ஏழு கிலோ மீற்றர் தொலைவில் மத்திய அரசின் படைகள் மாநில அரசுக்கு உதவத் தயார் நிலையில் இருந்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மத்திய அமைச்சரவை உடனடியாக கூடியது

[டில்லி]

உத்தரப் பிரதேச நெருக்கடியைத் தொடர்ந்து டில்லியில் மத்திய அமைச்சரவை உடனடியாக கூடியது.

இந்து - முஸ்லிம் மக்கள் வாழும் பகுதியில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது பற்றி அமைச்சரவையில் ஆலோசிக்கப்பட்டது. அத்துடன் உத்தரப் பிரதேசச் சட்டசபையைக் கலைத்து, ஜனாதிபதி ஆட்சியைக் அங்கு ஏற்படுத்துவ தென்ற முடிவும் அமைச்சரவையினால் மேற் கொள்ளப்பட்டது.

## பிரதமரை பதவிவிலக எதிர்க்கட்சிகள் கோரிக்கை

[டில்லி]

பிரதமர் நரசிம்மராவ் அவர்களும் பள்ளி வாசலுக்குப் பாதுகாப்பு வழங்கத் தவறியதற்குப் பொறுப்பேற்க வேண்டும் எனவே அவரும் பதவி விலக வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் கோரிக்கை விட்டுள்ளன

முன்னாள் பிரதமர் வி பி. சிங் தலைமையிலான ஜனதாதளமும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் இன்று லோக் சபாவில் அரசுக்கெதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரவுள்ளன.

## கிழக்கில் படை குவிப்பு விரைவில் நடவடிக்கையாம்

கிழக்கு மாகாணத்தில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர். அங்கு புதிய பல இராணுவ முகாம்களும் பெரும் எண்ணிக்கையிலான காவலரண்களும் அவசர அவசரமாக அமைக்கப்பட்டு வருகின்றன. கவசவாகனங்கள் பீரங்கிகள் என்பனவும் அப்பகுதிக்கு பெரும் எண்ணிக்கையில் அனுப்பப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு. திருகோணமலை மாவட்ட நகர்ப்புறங்களில் கூடுதலான படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர். மட்டக்களப்பில்மட்டும்கடந்த சில நாட்களில் பல இராணுவ முகாம்களும், காவலரண்களும், சோதனைச்சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன. அத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பேச்சுவார்த்தை நடத்த புலிகள் தயாராகவுள்ளனர்

— திலகர்

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண சிறிலங்கா அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தத்தாம்தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் இயக்க பேச்சாளர் லோரன்ஸ் திலகர் தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கு உகந்த சூழலை உருவாக்க யுத்த நிறுத்தம் மேற் கொள்ள வேண்டும் எனவும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழர் வாகனம் செல்ல படையினர் தடைவிதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக்கும் வாழைச்சேனை பிரதான பாதையில் அமைந்திருக்கும் கொம்மாதுறை இராணுவ முகாமுக்கு முன்னால் உளள பிரதான வீதியில் தமிழர்களதுவாகனங்கள் செல்வதற்கு படையினர் விதித்த தடை தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

இதனால் சேறும் சகதியும், குன்றும் குழியும் நிரம்பிய சுற்று வழிபபாதை ஒன்றை பாவித்து வரும் தமிழர்கள் தொடர்ந்தும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

## க. பொ. த (சா/த) பரீட்சை இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இன்று க. பொ. த (சாதாரண தர) பரீட்சை சுமார் 168 பரீட்சை நிலையங்களில் நடைபெறுகின்றது.

மேற்படி பரீட்சைக்கு சுமார் முப்பதினாயிரம் பரீட்சார்த்திகள்வரை தோற்றுகின்றனர். இவர்களுக்கு இன்று முதல் பாடமாக தமிழ்ப்பாட

[4 ஆம் பக்கம் பார்க்க]

# ஒரு வர்த்தகர் உட்பட மூன்று தமிழர் முஸ்லிம்களால் வெட்டிக் கொலை

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதி வர்த்தகரையும் அவருடன் கூடவே சென்ற இருவரையும் கடத்திச்சென்று வெட்டிக் கொலை செய்தவர்கள் முஸ்லிம் குண்டர்களே என்று தெரிவிக்கப்பட்டது.

'மணிஅன்கோ' என்ற கடை உரிமையாளரான இலங்கேஸ்வரன் என்பவருக்கு அநுராதபுரம் இராணுவ அதிகாரிகளிடம் மண்ணெண்ணெய்க்குரிய அனுமதிப்பத்திரம்பெற்றுத் தருகிறோம் என்று கூறி அவரையும் மேலும் இருவரையும் அழைத்துச் சென்ற முஸ்லிம் குண்டர்களே மூவரையும் கொடூரமாக வெட்டிக் கொலை செய்து அவர்களிடமிருந்த பெருந்தொகையான பணத்தை எடுத்துச்சென்றுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்ன இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக அநுராதபுரம் பொலிஸார் கொலையாளிகளைத்தேடித்திரிகின்றனராம்.

மேற்படி வர்த்தகரின்லொறி அநுராதபுரம் பகுதியிலிருந்து மீட்கப்பட்டதாகவும் சடலங்கள் மூன்றும் எரிந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## தாண்டிக்குளத்தில் இருவர் கைது

அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்ட பொருள்கள் சிலவற்றை வடபகுதி நோக்கி எடுத்து வந்த இருவர் தாண்டிக்குளம் சிறிலங்கா இராணுவ சோதனை முகாம் பகுதியில் வைத்து இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர்

காராளசிங்கம் என்ற சேமமடுப் பகுதியைச் சேர்ந்தவரும் கணபதி என்ற புளியங்குளம் பகுதியைச் சேர்ந்தவருமே கைதானார்கள்.

தடைசெய்யப்பட்ட பொருள்கள் வடபகுதி சென்றடைவதை கட்டுப்படுத்துவதில் இராணுவம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

## வரி விளம்பரம்

### அராலியூரரின் நூல்கள்

அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நாடகங்களை வாசித்தால் நீங்கள் எந்த வானொலி நிலையத்திற்கும் நாடகங்கள் எழுதலாம் (1)பொலிடோல் கதி. (2) பணமோ பணம். (3) கெட்டிக்காரர்கள். (4) முதலாம் பிள்ளை 30 ரூபா. வானொலி நாடகங்கள்.

(3751)

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி.

(இ-5510)

### தவறிவிட்டது

கோட்றோட் மல்லாகத்தைச் சேர்ந்த மிக்கேல் தனராசா என்பவரின் அடையாள அட்டை, ரொக்கப் பணம், முக்கிய சான்றிதழ்களுடன் (பேர்ஸ் ஒன்று) நல்லூர் படகுசேவை இடத்தில் தவறிவிட்டது- கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைத்கவும். சன்மானம் வழங்கப்படும். 3760

### ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

முக்கிய பல ஆவணங்கள் அடங்கிய கோவை ஒன்று மாங்குளம் பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர் போதிய ஆதாரங்களைச் சமர்ப்பித்து ஈழநாதம் அலுவலகத்தில் இக்கோவையை பெற்றுக் கொள்ளமுடியும்.

## கிழக்கு பல்கலை. மாணவர் கைது

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஏழு மாணவர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுதலையாகியுள்ளனர்.

இப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரைச் சந்திக்கச் சென்ற போதே இம்மாணவர்

## தடுப்புக்காவலில்இருப்போர் ஆங்கிலம் பயில வசதி

(கொழும்பு)

பள்ளேகல தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் ஆங்கிலம் பயில்வதற்கு பிரிட்டன் நிதி உதவி அளிக்க முன்வந்துள்ளது. படவரைஞர்கள், ஓட்டுநர், அச்சிடல் போன்ற இதர தொழில் துறைகளில் வழங்கப்படும் பயிற்சியோடு கூடவே ஆங்கிலப் போதனையும் இடம் பெறும் என்றும், அவர்கள் விடுதலை செய்யப்பட்ட பின்னர் தொழில் வாய்ப்பை பெற இது உதவும் என்றும், மேலும் கூறப்பட்டுள்ளது.

இந்த வகுப்புகளைத் தொடர்வதற்கு வசதியாக கண்டியிலுள்ள பிரிட்டிஷ் கவுன்சிலின் நூல் நிலையம் போதிய ஒத்துழைப்பை வழங்க இருக்கிறது.

## வவுனியா தெற்கு தமிழ்ப்பிரிவு பிரதேச சபை செயலருக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு பிரதேசசபை செயலாளருக்குரிய அதிகார கையளிப்பு முற்றாக நிறைவேற்றப்படவில்லை என்று அறியவருகிறது.

இதன் காரணமாக புதிய திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் பிரதேசச் செயலகம் திண்டாடுகிறதாம்.

வவுனியா மாவட்டத்தில் இராணுவம் அற்ற பகுதியில் நிலவும் தேவைகள் பலவற்றை தீர்த்து வைப்பதற்கு அவர் ஆவல் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்ற போதிலும் நிர்வாக சீர்கேடு ஏற்பட்டுள்ளதால் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்று தெரிய வருகிறது. (தி)

## ஆறுவருடங்களாகியும் நட்ட ஈடு இல்லை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஆலையடிவேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆறு வருடங்களுக்கு முன்னர் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சேதமாக்கப்பட்ட சுமார் 852 வீடுகளுக்கு இதுவரை நட்ட ஈடு எதுவும்வழங்கப்படவில்லை.

---

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்
(கட்டுப்படுத்தப்பட்டது)

### சகல பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கும், விசேட பொதுக்கூட்டம்

9. 12. 1892

எமது சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 9 12 92 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு சங்க தற்காலிக பணிமனையில் (பி. எஸ் சேவிஸ் நிலையம் யாழ்ப்பாணம்) சங்கத் தலைவர் திரு இ. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் கூட்டப்பெறும். தவறாது கூட்டத்திற்கு சமுகமளித்து ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

முக்கிய குறிப்பு:- கூட்ட நிகழ்ச்சி நிரல் கிடைக்கப் பெறாதோர் தங்கள் கிளையிலோ அல்லது தலைமைக் காரியாலயத்தில் செயலாளருடனோ தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

2. பங்குப்பணம் ரூ 100/-: 6. 3. 1992இல் திருத்தியமைக்கப்பட்ட கூட்டுறவுச் சட்டத்தின்படி உப விதி 18(1) அமைவாக ஒரு பங்கின் பெறுமதி ரூ. 100/- ஆகும். எனவே சகல அங்கத்தவர்களும் தமது பங்கினை ரூ 100/- ஆக வைத்திருக்கத் தவறும் பட்சத்தில் கிளைக்குழுத் தேர்தலிலோ பொதுச் சபையிலோ நெறியாளர் குழுவிலோ பிரதிநிதித்துவம் வகிக்க முடியாது. எனவே 31 1 1993க்கு முன்னர் தங்கள் பங்குப் பணத்தை ரூ. 100/- ஆக ஆக்கிக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர். தலைவர்

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

(சி/553 5)

---

## பிறந்ததின வாழ்த்து

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் கந்தையா கனகரெத்தினம்

மண்ணுலகில்: 1888-04-11

விண்ணுலகில்: 1992-11-07

31 நாட்கள் மறைந்தாலும் உங்கள் நினைவு எங்களை விட்டு ஒருபோதும் அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி



வீரப்பிறப்பு: 24. 9. 1974

வீரச்சாவு: 24. 10. 1992

### லெப். நெருமாறன் (குமரேஸ்)
(கிருஷ்ணபிள்ளை கிருபாகரன்)

(மணலாறு மண்கிண்டி இராணுவ முகாமிற்கு அருகாமையில் அமைந்திருந்த காவலரண்கள் தகர்ப்பின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்)

அன்னை வயிற்றில் இருக்கும் போது
தந்தையை இழந்தாயடா...
பதினைந்து வயது வரை அன்னை
அரவணைப்பில் வளர்ந்தாயடா
பதினாறு வயதினிலே தாகம் கொண்டு
நாடுகாக்கப் புறப்பட்டாயடா.
போராடப் புறப்பட்டு மணலாற்று மண்ணில்
போர்க்களம் புகுந்தாயடா
எதிரிகளின் பாசறையை தேடிப் போய்
போர்க்களத்தில் உன்னுயிரைக் கொடுத்தாயடா
கிருபா! நீ பிறந்த மண்ணில் உன்
முகம் காணத் துடிக்கிறோமடா
சூரியன் தான் உதிக்க மறந்தாலும்
உன் நினைவை நாங்கள் என்றும் மறவோமடா

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

புலோலி தெற்கு, புலோலி.

அம்மா, தங்கை, ஐயா, அம்மம்மா, அன்ரி சித்தப்பாமார், சித்திமார், தம்பிமார், மாமாமார், மாமிமார், மற்றும் உறவினர்கள்.

(3752)

---

## நினைவு கூருகின்றோம் .. 1992-12-07

1988 ஆம் ஆண்டு இதேதினத்தில் பருத்தித்துறை, மாதனைப் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -
லெப். அசோக் (சிவகுரு சிறிதரன் - அசோக் வீதி, கட்டுவளை, புலோலி மேற்கு, பருத்தித்துறை - யாழ்)

நெல்லியடிப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -
சுருளி (முருகன் சிவராசா - கரவெட்டி கிழக்கு, வடமராட்சி - யாழ்.

1990 ஆம் ஆண்டு கட்டுவன் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -
கப்டன் கடாபி (தங்கவேல் பாபு -சிவகுமாரன் வீதி, அரியாலை - யாழ்.)

திருக்கோணமலைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

(யாழ்ப்பாணம்)

முக்கிய பல ஆவணங்கள் அடங்கிய சோவை ஒன்று மாங்குளம் பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர் போதிய ஆதாரங்களைச் சமர்ப்பித்து ஈழநாதம் அலுவலகத்தில் இக்கோவையை பெற்றுக் கொள்ளமுடியும்.

## கிழக்கு பல்கலை. மாணவர் கைது

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஏழு மாணவர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுதலையாகியுள்ளனர்.

இப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரைச் சந்திக்கச் சென்றபோதே இம்மாணவர்களைப் பொலிசார் கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மூக்குக் கண்ணாடி இலவசம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் தென்மராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு இலவச கண் பரிசோதனை முகாமொன்று சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் கடந்த வாரம் நடாத்தப்பட்டது.

இதில் யாழ். மாவட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் கே. ரி சிவபாதம் யாழ். போதனா வைத்திய சாலையின் கண் வைத்திய நிபுணர்களான டாக்டர் சிவயோகராஜா, டாக்டர் செல்வி சரவணமுத்து ஆகியோர் மாணவர்களுக்கான கண் பரிசோதனையை மேற்கொண்டனர். இப்பரிசோதனையின் போது மூக்குக் கண்ணாடி அணிய வேண்டிய மாணவர்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் இலவசமாக வழங்கும் என லயன்ஸ் கழகத்தினர் தெரிவித்தனர். (மு)

## உலகத் தமிழர் மாநாடு

(சென்னை)

இம் மாதம் பதினேழாம் திகதியன்று சென்னையில் உலகத் தமிழர் மாநாடு நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது. உலகத் தமிழர் மாமன்றம் ஏற்பாடு செய்துள்ள இம் மாநாடு சென்னைப்பல்கலைக் கழக நூற்றாண்டுவிழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 21-ம் நூற்றாண்டில் தமிழர்கள் என்ற தொனிப்பொருளில் மாநாடு நடத்தப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

2. பங்குப்பணம் ரூ 100/-: 6. 3. 1992இல் திருத்தியமைக்கப்பட்ட கூட்டுறவுச் சட்டத்தின்படி உப விதி 18 (1) அமைவாக ஒரு பங்கின் பெறுமதி ரூ. 100/- ஆகும். எனவே சகல அங்கத்தவர்களும் தமது பங்கினை ரூ 100/- ஆக வைத்திருக்கத் தவறும் பட்சத்தில் கிளைக்குழுத் தேர்தலிலோ பொதுச் சபையிலோ நெறியாளர் குழுவிலோ பிரதிநிதித்துவம் வகிக்க முடியாது. எனவே 31 1 1993க்கு முன்னர் தங்கள் பங்குப் பணத்தை ரூ. 100/- ஆக ஆக்கிக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர். தலைவர்

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

(சி/553 5)

## பிறந்ததின வாழ்த்து



## செல்வி அம்ஷிகா (தமிழினி)

பொலிகண்டி பாலாவியைச் சேர்ந்த V. K. ராஜா, ரதி தம்பதிகளின் அருந்தவப்புதல்வி அம்ஷிகா (தமிழினி) தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று 7-12-92இல் தனது இல்லத்தில் சிறப்பாக கொண்டாடுகிறார். இவரை கல்வியும், செல்வமும் பெற்று சீரும் சிறப்புமாக வாழவேண்டுமென்று அப்பா, அம்மா, அம்மையா, அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், ஆசைமாமா (மோகன்) மாலாக்கா, சித்தப்பாமார், சித்திமார், ரமணன் அண்ணா, றம்சாக்கா, பாட்டி, உற்றார், உறவினர் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(3730) - குடும்பத்தினர்



அமரர் கந்தையா கனகரெத்தினம்

மண்ணுலகில்: 1988-04-11

விண்ணுலகில்: 1992-11-07

31 நாட்கள் மறைந்தாலும் உங்கள் நினைவு எங்களை விட்டு ஒருபோதும் அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.

ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும்
மனைவி, பிள்ளைகள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஏழாலை மத்தி,
ஏழாலை.

[3753]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம்: 07 — 01 — 1969



வீரச்சாவு: 07 — 12 — 1991

## வீரவேங்கை சீலன் / அருளாளன்

[இரத்தினம் உதயகுமார்]

தமிழீழ தாயகத்தில் மண்மீட்புப் போரிலே மனமுவந்து வீரவேங்கையாகி களம் பல கண்டு கடுஞ் சமர் ஆடிய உன்னை எமது சுருத்தினில் நிழலாடக் காண்கிறோம். தன்மானப் போரிலே உனது இதய தாகம் நீ மறைந்தாலும் உனது தோழர்களின் உத்வேக முன்னேற்றத்தைக்கண்டு நாங்கள் உள்ளக்கால் பெருமிதம் அடைகிறோம். உன் கரத்தில் விளையாடிய துப்பாக்கி ஓய்ந்து இருக்காது. நாங்கள் எண்ணியதை திண்ணியமாக பெறுவோம்.

உங்கள் துயரால் வாடும்
ஐயா, அம்மா, அண்ணாக்கள்,
தங்கச்சிமார், அத்தான், அக்கா,
மச்சாள், பெறாமக்கள், மருமக்கள்.

3 ஆம் சந்தி,
கெருடாவில் தெற்கு,
தொண்டமானாறு.

(375)

## நினைவு கூருகின்றோம்..

## 1992-12-07

1988 ஆம் ஆண்டு இதேதினத்தில் பருத்தித்துறை, மாதனைப் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

லெப். அசோக் (சிவகுரு சிறிதரன் - அசோக் வீதி, கட்டுவளை, புலோலி மேற்கு, பருத்தித்துறை - யாழ்)

நெல்லியடிப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

சுருளி (முருகன் சிவராசா - கரவெட்டி கிழக்கு, வடமராட்சி - யாழ்.

1990 ஆம் ஆண்டு கட்டுவன் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

கப்டன் கோபி (தங்கவேல் பாபு -சிவகுமாரன் வீதி, அரியாலை - யாழ்.)

திருக்கோணமலைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

நரயன் | நாயர் (செல்லத்துரை துரைராசா - காட்டுக்குளம், திரியாய்-திருக்கோணமலை)

மன்னார் - நானாட்டான் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த மாணவன்.

1991 ஆம் ஆண்டு வளலாய்ப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

வடமராட்சி தாக்குதல் பிரிவுத் தளபதி

மேஜர் இளங்கோ (வல்லிபுரம் மன்மதநாதன் - கப்புது, கரவெட்டி, யாழ்.)

2-ம் லெப். சின்னத்தம்பி (கணபதிப்பிள்ளை சண்முகம் - புலோலி மேற்கு, பருத்தித்துறை, யாழ்.)

பலாலி முகாமிலிருந்து முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினரை இடைக்காட்டுப் பகுதியில் வழிமறித்து மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

அருளாளன் / அருளானந்தன் (இரத்தினம் உதயகுமார் (சீலன்) - 3-ம் சந்தி, கெருடாவில் தெற்கு, தொண்டமானாறு - யாழ்)

துணைப்படை வீரர்

ரவி (சோ. செல்வேந்திரன் - பொலிகண்டி, வல்வெட்டித்துறை - யாழ்.)

கொக்கட்டி, இலக்கந்தை, உப்புவெளி, கூனித்தீவு ஆகியபகுதிகளைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்டுக் காயமடைந்த நிலையில் உயிருடன் தீமூட்டிக் கொல்லப்பட்ட தமிழர்.

அச்சுவேலி, தொண்டமானாறு வீதி, சுதிரிப்பாயில் இடம்பெயர்ந்து ஓடிக்கொண்டிருந்தவர்கள் மீது சிறிலங்காப் படையினர் விமானத்திலிருந்து மேற்கொண்ட குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 3 - தமிழர்கள். அச்சுவேலி, சுதிரிப்பாய், இடைக்காடு, பத்தமேனிப் பகுதிகளில் சிறிலங்காப் படையினரின் கண்மூடித்தனமான செல் வீச்சில் கொல்லப்பட்ட 3 - தமிழர்கள்.

உடுப்பிட்டிப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் விமானத்திலிருந்து மேற்கொண்ட குண்டு வீச்சில் பலியான வியாபாரியான தமிழர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/5538)

### சிந்தனைக்கு

ஒரு நாட்டில் சட்டங்கள் மலிந்திருப்பது மருத்துவர்கள் மலிந்திருப்பது போலவே, நலிவிற்கும் நோய்க்கும் அறிகுறியாகும்.

- வால்ட்டேயர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 07-12-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

## சட்டம் உண்டு நடைமுறையில் இல்லை

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் டெஸ்மண்ட் பெர்னான்டோ தமிழ் மொழியில் தந்தியொன்றை அனுப்ப எடுத்த முயற்சி இருபத்திஐந்து பேருடன் தொடர்பு கொண்டபின்னர், நாற்பத்திஐந்து நிமிடம் கழித்து நிறைவேறியதாக பாராளுமன்றத்தில் பேசிய எம். பி. ஒருவர் தெரிவித்தார். அதுவும் '' நான் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் எனக்கே இந்த நிலையா? '' என அவர் கேள்வி எழுப்பிய பின்னரே சாத்தியப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் அரசகரும மொழிகளில் ஒன்றான தமிழ் மொழி, அமுலாக்கப்படுவதன் லட்சணத்தை இதிலிருந்தே எவரும் புரிந்து கொள்ளலாம். 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் மூலம் தமிழ் மொழி ஓர் அரசகருமமொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள போதும், அரசகரும மொழிகளின் செயற்பாடுகள் குறித்து ஆராய அரசகருமமொழிகள் ஆணைக்குழு நியமிக்கப்பட்ட போதும், தமிழ் மொழி அமுலாக்கம் இந் நிலையில் உள்ளமை அதன் மீது அரசு செலுத்தும் கவனத்தையும், அக்கறையையும் காட்டுவதாகவே உள்ளது.

இன்று கூட கொழும்பிலுள்ள அரச தலைமை அலுவலகங்கள் வடக்கு - கிழக்கு மாகாணங்களுடன் தனிச் சிங்களத்திலேயே தொடர்பு கொள்கின்றன. இதுமட்டுமல்ல, பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சின் ஆலோசனைக்குழுக் கூட்டங்களில் கூட சிங்கள உரைகளுக்கு தமிழ் மொழி பெயர்ப்பு வழங்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இதற்கு தமிழ் மொழி அமுலாக்கல் குறித்த அரசாங்கத்தின் அசட்டையே காரணமாகும். தமிழ் மொழி அமுலாக்கலில் அரசு அக்கறை செலுத்தியிருக்கும் ஆனால், தமிழ் மொழி அமுலாக்கல் பெரும் பிரச்சினைக்குரிய தொன்றாக இருந்திருக்காது. இதை விடுத்து அரசாங்கம் மொழி பெயர்ப்பாளர்கள் இல்லை, தட்டெழுத்தாளர்கள் இல்லை எனத் தெரிவிப்பதெல்லாம் ஒரு போலிச் சாட்டாகும்.

# எனது கணவரின் மரணத்தில் பதிலில்லாத பல கேள்விகள்

**- திருமதி லலி கொப்பேகடுவ**

எனது கணவரின் மரணம் குறித்து பதிலளிக்கப்படாத பல கேள்விகள் இருந்தன. கணவருடன் நெருக்கமாக பணிபுரிந்த ஒன்பது வேறு அதிகாரிகளும் படையினரும் அவருடன் சேர்ந்தே பலியானது நாட்டுக்குப் பெரும் கவலை தரும் விடயமாகும் என்று திருமதி லலி கொப்பேகடுவ செய்தியாளர்களிடம் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்; ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவும், ஏனைய இராணுவ அதிகாரிகளும் கொலை செய்யப்பட்ட விதம் மற்றும் சூழ்நிலைகள் குறித்து மிகுந்த நம்பகத்தன்மையுடன் விசாரணை செய்வதற்கு சர்வதேச ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்.

எனது கணவர் தமது தலைமையில் ஒபரேஷன் பைனல் கவுண்டவுன் என்ற பெயரிலான இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்க இருப்பதற்கு இரு தினங்களுக்கு முன்பாக அராலித்துறையில் 1992 ஆகஸ்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் மூலம் கொல்லப்பட்டார்.

அந்த விதிவசமான தினத்தன்று எனது கணவரும் அவருடன் சேர்ந்து பலியானவர்களும், தங்களது தாய்நாட்டிற்காக சேவை செய்வதற்காக உயிர்களை இழந்தனர். தமிழ் ஈழம் என்னும் தனியொரு நாட்டை உருவாக்குவதற்கான நோக்கத்துடன் வடக்கு-கிழக்கிலே நடைபெறுகின்ற பயங்கரவாதப் போரின் யதார்த்தங்களுக்கும், அனர்த்தங்களுக்கும் துணிச்சலுடன் கடந்த ஒரு தசாப்தகாலமாக முகம்கொடுத்த போது அந்த வீரர்களின் கடமையுணர்வும், தேச பக்தியும் உற்சாகமும் ஒரு கம்பீரமான உற்சாகத்தை கண்டிருந்தன.

எனது கணவர் தனது வாழ்நாளின் கடைசி நாள் வரை இலங்கை இராணுவத்தின் உயர் பாரம்பரியங்களுக்கு இசைவான ஒரு படைவீரர். எவ்வாறெனினும் தான் நேசித்த இலங்கை இராணுவத்தின் தலைமைத்துவ அந்தஸ்து அவருக்கு நெருக்கமாக வந்து கொண்டிருக்கையில் எனது கணவர் சதிநடவடிக்கைகளுக்கும் நயவஞ்சக சூழ்ச்சிகளுக்கும் பலிகடாவாக வேண்டியேற்பட்டது. இந்த சூழ்ச்சி நடவடிக்கைகளின் விளைவாக போர்முயற்சிகளுக்கு பாரதூரமான பின்னடைவு ஏற்பட்டது மாத்திரமல்ல. ஒரு படைவீரர் என்ற வகையில் அவரது சொந்த வாழ்விலும் துக்கமும் அவலமும் ஏற்பட்டது.

எதிரியின் கைகளில் எனது கணவர் இறந்து விட்டதாக இரு சந்தர்ப்பங்களில் செய்திகள் எவ்வாறு வெளியாகின என்பதையும் நாட்டு மக்கள் நன்கறிந்தே இருக்கிறார்கள். தனக்கு எதிரான துரதிர்ஷ்டவசமான இந்த முயற்சிகள் குறித்து எனது கணவர் நன்கறிந்திருந்தார். கொழும்புக்கு வெளியில் இருக்கவே அவர் நாட்டம் கொண்டிருந்தார்.

''லலி எனது துருப்புகளுடன் இருக்கையில் மிகவும் பத்திரமாக நான் இருக்கிறேன். எனக்கு ஊறு விளைவிக்காதவர்கள் என்றால் அவர்கள் தான்'' என்று எனக்குக் கணவர் சொல்வார். குடும்பத்தை அவர் சந்திப்பதற்கு ஏதுவாக நானும் பிள்ளைகளும் அனுராதபுரம் செல்வதற்கு ஏற்பாடுகளை செய்தோம். சாத்தியமான சகல வேளையிலும் குறுகிய நேரத்திற்கு நாம் கணவரை அநுராதபுரத்தில் சந்திப்போம்.

எனது கணவரின் மரணத்துக்கு முன்னதான சம்பவங்கள், தலைமைப் பதவியில் இருந்து அவரை அகற்றுவதற்கும், அவரது அதிகாரத்தை தளர்த்தி பிரதான போர் முனையிலிருந்து ஒதுக்கி வைப்பதற்குமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் இடம்பெற்றவை. இந்த நிகழ்வுகளின் காரணமாக தடுமாற்றம் அடைந்து எரிச்சலூட்டுக்கு ஆளான அவர் இராணுவத்திலிருந்து விலகுவதற்கு கூட தீர்மானித்திருந்தார்.

எவ்வாறெனினும் பத்திரிகைகளில் தெரிவிக்கப்பட்டிருந்ததைப் போல இராணுவத்தில் தொடர்ந்தும் பணியாற்ற அவர் தூண்டப்பட்டார். மிகவும் நெருக்கடியான சூழ்நிலைகளின் கீழ் என்றாலும் தனது பணியை அவர் தொடரக்கூடியதாக கௌரவத்தை தக்க வைக்கக்கூடிய விட்டுக் கொடுப்பு ஒன்று காணப்பட்டிருந்தது.

கணவர்மாருக்கு தற்போது நேர்ந்த கதியின் உண்மையை அதுவும் திட்டவட்டமான உண்மையை அறிந்து கொள்ள நானும் (பலியான ஏனைய அதிகாரிகளினதும், வீரர்களினதும்) விதவைகளின் குடும்பங்களுக்கு மாத்திரமல்ல இந் நாட்டின் பிரஜைகள் சகலரும் விரும்புகிறார்கள் என்பதை கடந்த சில மாத நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

எனது கணவரும், ஏனைய அதிகாரிகளும் படுகொலை செய்யப்பட்டதற்குக் காரணமான குண்டு அவர்கள் பயணம் செய்த வாகனத்திற்குள்ளேயே மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக உறுதியாகக் கூறும் நிபுணர்களின் அபிப்பிராயங்களை நான் அறியக் கூடியதாக உள்ளது.

குண்டு வெடிப்புச் சம்பவ ஆரம்பத்தில் இருந்தே தொடர்புச் சாதனங்கள் மூலமாக வெளியிடப்பட்ட உத்தியோக பூர்வ விளக்கம் இதற்கு முற்றிலும் முரணானதாகும். எனவே எனது கணவர் மரணித்த சூழ்நிலை குறித்தும், எனக்குக் கிடைத்த தகவல் குறித்தும் மக்களுக்கு அறியத் தருகிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.

# அமெரி, திருப்தியடுத்த நவாப் ஷரிப் முயல்கிறாராம்

**- எதிர்க்கட்சிகள் கண்டனம்**

(இஸ்லாமாபாத்)

அமெரிக்காவை திருப்திப்படுத்துவதற்காக நாட்டின் அணுசக்தித் திட்டத்தை கைவிடுவதாக பிரதமர் நவாப் ஷரிப் மீது, எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் பிரதமருமான பெனசிர் பூட்டோ குற்றம் சாட்டினார். பாகிஸ்தானில் நவாப் ஷரிப் அரசு பதவி விலக வேண்டுமெனக் கோரி பெனசிர் பூட்டோ தலைமையில் நடைபெற்ற மூன்று நாள் பேரணி நேற்று முன்தினம் லாகூரில் முடிவடைந்ததை தொடர்ந்து இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை பேரணியில் சென்றவர்கள் லாகூரில் பாராளுமன்றக் கட்டடத்தினுள் புகுந்து ஆர்ப்பாட்டம் செய்ததாகவும் ஜன்னல், கதிரை, மேசைகள் போன்றவற்றை அடித்து நொருக்கியதாகவும் பொலிசார் தெரிவித்தனர். ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க பொலிசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப்பிரயோகித்தனர்.

## மீண்டும் உறவைச்சீர்ப்படுத்த ஈராக் ஆர்வமாக உள்ளது

**- துணைப்பிரதமர்**

(பக்தாத்)

வளைகுடாப்போரின்போது தமக்கு எதிராக செயற்பட்ட அரபு நாடுகளுடன் உறவை சீராக்க விரும்புவதாக ஈராக் கூறியுள்ளது.

பக்தாத்தில் ஈராக் துணைப் பிரதமர் ரமதான் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மேலும் அரபு நாடுகளுக்கு இடையேயான பிளவுகள் நீடித்து இருக்க முடியாது எனவும், இந்த நாடுகளுடன் உறவை சீராக்க ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு ஈராக் தயாராக இருக்கின்றது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வளைகுடாப்போரின்போது எகிப்து, சிரியா, சவூதி அரேபியா போன்ற நாடுகள் ஈராக் எதிர்ப்பு அணியில் இடம்பெற்றிருந்தது தெரிந்ததே.

## முக்கிய நகரின் ஒரு பகுதி

## உ. பி. யில் மூவர் பலி

உத்தரப் பிரதேச மாநிலத்

## மண்ணெண்ணெய் எடுத்துவர கூட்டுப்படை அனுமதி தேவை

(கொழும்பு)

வடபகுதியில் இருக்கும் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு மண்ணெண்ணெய் எடுத்துச் செல்வதற்கு இராணுவத்தின் அனுமதி பெறப்படல் வேண்டும் என்று கூட்டுப்படைத் தலைமையகம் கூறியுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கும், பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களுக்கும் இது பொருந்தும் என்றும் மேலும் கூறப்பட்டுள்ளது.

## வடக்கு- கிழக்கு இணைப்பை தொடர்ந்தும் நீடிக்குக

**-சட்ட அறிஞர்கள் கோரிக்கை**

(கொழும்பு)

தற்காலிகமாக இணைக்கப்பட்டிருக்கும் வடக்கு-கிழக்கு இணைப்பைத் தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் என்று சட்ட மற்றும் சமூகத்துறை அறிஞர்கள் சிறிலங்கா அரசைக் கோரியுள்ளனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எம். பியான மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக்குழு ஏகமனதான தீர்மானம் ஒன்றைக்காண்பதற்கு இந்திய-இலங்கை உடன்பாட்டின் கீழான வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்ந்து நீடிக்கவேண்டும் எனவும் அவ் அறிஞர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கால எல்லையும் மேலும் நீடிக்கப்படலாம் என்று தெரிய வருகிறது.

## சிறிமாவோ ஆராய்வு

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியின் பிரதம கொறடாவான றிச்சர்ட் பதிரானவைப் பதவி விலக்கக் கோரி அக்கட்சியின் நாற்பத்தியொரு எம்.பிக்களின் விபரங்கள் பற்றி அறிய கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா முயற்சி மேற்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

உள்ளமை அதன் மீது அரசு செலுத்தும் கவனத்தை யும், அக்கறையையும் காட்டுவதாகவே உள்ளது

இன்று கூட கொழும்பிலுள்ள அரச தலைமை அலுவலகங்கள் வடக்கு - கிழக்கு மாகாணங்க ளுடன் தனிச் சிங்களத்திலேயே தொடர்பு கொள் கின்றன. இதுமட்டுமல்ல, பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சின் ஆலோசனைக்குழுக் கூட்டங்களில் கூட சிங்கள உரைகளுக்கு தமிழ் மொழி பெயர்ப்பு வழங்கப்பட வில்லை எனத் தெரியவருகின்றது.

இதற்கு தமிழ் மொழி அமுலாக்கல் குறித்த அரசாங் கத்தின் அசட்டையே காரணமாகும். தமிழ் மொழி அமுலாக்கலில் அரசு அக்கறை செலுத்தியிருக்கும் ஆனால், தமிழ் மொழி அமுலாக்கல் பெரும் பிரச் சினைக்குரிய தொன்றாக இருந்திருக்காது. இதை விடுத்து அரசாங்கம் மொழி பெயர்ப்பாளர்கள் இல்லை, தட்டெழுத்தாளர்கள் இல்லை எனத் தெரிவிப்பதெல்லாம் ஒரு போலிச் சாட்டாகும். அத்தோடு மேற் குறிப்பிட்ட வற்றிற்கு ஆட்கள் பற் றாக்குறை இருப்பின் இது வரையில் அவற்றை உரு வாக்கியுமிருக்க முடியும்.

இதேவேளை தமிழ்மொழி அமுலாக்கல் சீராக இடம் பெறவில்லை எனக் குற்றச்சாட்டுகள் அரசி ற்கு எதிராக முன் வைக்கப்பட்டபோது அரசாங்கம் அரச கருமமொழி ஆணைக்குழுவை அமைத்தது. ஆனால், அரச கரும மொழி ஆணைக்குழுவும் தனது சேவையைத் திறம்படச் செய்யவில்லை. அரசகருமமொழிகள் சீராக அமுலாக்கப்படவில்லை என்பதற்கு அரச கரும மொழிகள் ஆணைக்குழு வின் தலைவருக்கு நேரடியாகக் கிடைத்த அனு பவமே போதுமானதாகும்

இதேவேளை இன்றுள்ள அரசியற் சூழ்நிலை யில் தமிழ் மொழி அமுலாக்கலில் அரசாங்கம் கொண்டுள்ள அக்கறையானது இனப்பிரச்சினை தீர்வில் அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாட்டை அளவீடு செய்யும் ஒரு கோலாகவும் கருதலாம். தமிழ் மொழியை அமுலாக்குதல் என்பது ஓர் பெரும் சிக்கல் நிறைந்த விடயம் என்று எவ ரும் கூறிவிட முடியாது. ஆனால் இதைவிட பலம டங்கு சிக்கலானதும் பெரியதுமான இனப்பிரச்சி னைக்கு அரசியற் தீர்வுகுறித்துப் பேசும் அரசாங் கம், தான் ஏற்றுக்கொள்ளும் தீர்வுத்திட்டத்தைத் தானும் எவ்வாறு நிறைவேற்றும், நடைமுறைப்ப டுத்தும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

கடந்த இரு வருடத்திற்கு மேலாகவே, நடந்து கொண்டிருக்கும் போர் நிறுத்தப்பட்டு, சமாதா னப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெ னில் முதலில் அதற்கேற்ற சுமுகமான சூழ்நிலை யையும், நம்பிக்கையையும் அரசாங்கம் உருவாக்க வேண்டும் என விடுதலைப் புலிகள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாகக் கோரி வருகின்றனர். அதா வது, பேச்சு வார்த்தையில் மக்களுக்கு நம்பிக்கை இருக்கக்கூடிய அரசியல்சூழ்நிலை உருவாகவேண் டும் இதைவிடுத்து 1978இல் சட்ட ரீதியாக அரச கரும மொழியாக்கப்பட்டதமிழுக்கு உரிய அந்தஸ் தைக் கொடுக்காத அரசாங்கத்திடம் இனப்பிரச் சினைக்கு நியாய தீர்வை வைக்கும், அதனை அமுலாக்கும் என எதிர்பார்ப்பதெல்லாம் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகவே அமையும் என் பதில் சந்தேகமெதுவுமில்லை.

---

படுத்துவதற்காக நாட்டின் அணுசக்தித் திட்டத்தை கை விடுவதாக பிரதமர் நவாப் ஷரிப் மீது, எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் பிரத தானால் நவாப் ஷரிப் அரசு பதவி விலக வேண்டுமெனக் கோரி பெனாசிர்பூட்டோ தலைமையில் நடைபெற்ற மூன்று நாள் பேரணி நேற்று பெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை பேரணியில் சென்றவர்கள் லாகூரில் பாராளுமன்றக் கட்டடத்தி னுள் புகுந்து ஆர்ப்பாட்டம் செய்ததாகவும் ஜன்னல், கதிரை, மேசைகள் போன்ற வற்றை அடித்து நொருக்கிய தாகவும் பொலிசார் தெரிவித் தனர். ஆர்ப்பாட்டக் காரர் களைக் கலைக்க பொலிசார் கண்ணீர்ப் புகைக் குண்டு களைப்பிரயோகித்தனர்.

#### மறுப்பு

பாகிஸ்தானிடம் அணுகுண் டுகள் இருப்பதாக கூறப்படு வதை அந்நாட்டு அரசு வன் மையாக மறுத்துள்ளது. எனி னும் இஸ்லாமாபாத்தில்நடை பெற்ற பொதுக் கூட்டமொன் றில் பேசிய பிரதமர் நவாப் ஷரிப் வெளியாரின் மிரட்டல் களுக்கு அஞ்சி தமது அரசு அணுசக்தி திட்டத்தை கை விட போவதில்லை எனத் தெரிவித்தார்.

## மீண்டும் உறவைச்சீர்ப்படுத்த ஈராக் ஆர்வமாக உள்ளது

### - துணைப்பிரதமர்

(பக்தாத்)

வளைகுடாப்போரின்போது தமக்கு எதிராக செயற்பட்ட அரபு நாடுகளுடன் உறவை சீராக்க விரும்புவதாக ஈராக் கூறியுள்ளது

பக்தாத்தில் ஈராக் துணைப் பிரதமர் ரம்தான் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மேலும் அரபு நாடுகளுக்கு இடையே யான பிளவுகள் நீடித்து இருக்க முடியாது எனவும், இந்த நாடுகளுடன் உறவை சீராக்க ஆக்கபூர்வமான முய ற்சிகளுக்கு ஈராக் தயாராக இருக்கின்றது எனவும் தெரி விக்கப் பட்டுள்ளது.

வளைகுடாப்போரின்போது எகிப்து, சிரியா, சவூதி அரே பியா போன்ற நாடுகள் ஈராக் எதிர்ப்பு அணியில் இடம்பெற் றிருந்தது தெரிந்ததே.

## உ. பி. யில் மூவர் பலி

உத்தரப் பிரதேச மாநிலத் தின் திரையரங்குக்கு அருகே குண்டு ஒன்று வெடித்ததால் மூவர் கொல்லப்பட்டதுடன் பதினாறு பேர் காயமடைந் துள்ளனர்.

## முக்கிய நகரின் ஒரு பகுதி செர்பியபடைகளிடம் வீழ்ச்சி

(சரஜேயோவா)

சரஜேயோவாவின் சுற்றுப் புறப் பகுதி நகரமொன்றை செர்பியப்படைகள் கைப்பற்றி யிருப்பதாகக் கூறப்படுகிறது. இதற்கென கடும்யுத்தம் நடை பெற்றதாகவும் இதில் பலர் கொல்லப்பட்டதாகவும் கூறப் படுகிறது. இந்த நகரம் கைப் பற்றப்பட்டதையடுத்து முஸ் லிம் துருப்புகள் பின்வாங்கி வருவதாகவும், எனினும் தொடர்ந்தும் பெரும் அள வில் படையினர் குவிக்கப் பட்டிருப்பதால் யுத்தம் தொடர்ந்து நடைபெறுவ தாகவும் கூறப்படுகின்றது.

## உளவு பார்த்தபாக். அதிகாரி நாடு கடத்தப்பட்டார்

[டில்லி]

புதுடில்லியில் இருக்கும் பாகிஸ்தான் தூதுவரகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இந்தி யாவில் உளவு பார்க்கும் நடவ டிக்கையில் ஈடுபட்டிருக்கும் போது கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டதாக இந்திய அரசு கூறியுள்ளது.

இந்திய இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவரிடமி ருந்து ரகசிய ஆவணம் ஒன்றை வாங்கிக் கொண்டிருந்தபோது பாகிஸ்தான் தூதுவரகத்தைச் சேர்ந்த இவ் அதிகாரி கைது செய்யப்பட்டார்.

இந்த ரகசிய ஆவணத்தில் காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதி யின் இந்திய இராணுவத்தின் நிலைகள், சில போலி இந்திய பாஸ்போட்டுகள் என்பன உள் ளடக்கப்பட்டிருந்ததாகவும், பாகிஸ்தான் அதிகாரி அந்நா ட்டிடம் உடனடியாக கையளி க்கப்பட்டு விட்டதாகவும் கூறப்பட்டுள்ளது

## ரஷ்யப் பாராளுமன்றத்தால் யெல்சினுக்கு நெருக்கடி

சீர்திருத்தங்களை குறிக் கோளாகக் கொண்ட அரசுத் தலைவர் பதவியை தக்க வைத்துக் கொள்வதற்காக சிரமப்பட வேண்டிய நிலை யில் ரஷ்ய அதிபர் பொரீஸ் யெல்சின் இருப்பதாகக் கூறப்படுகிறது

ரஷ்யப் பாராளுமன்றத்தி னால் அமைச்சர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று கொண்டுவரப்பட்ட பிரே ரணை நான்கு வாக்குகள் வித் தியாசத்தில் நேற்று முன்தினம் தோற்கடிக்கப்பட்டது தெரிந் ததே.

தற்போது மற்றுமொரு பிரேரணையை கொண்டுவந் திருக்கும் வலதுசாரிகளின் முயற்சியையும் முறியடிக்க வேண்டிய நிலையில் ரஷ்ய அதிபர் இருப்பதாகக் கூறப் படுகிறது.

## பொஸ்னியாவில் படைபலம் பயன்படுத்துவதை எதிர்க்கிறேன்

### - பிரிட்டன் பிரதமர்

(லண்டன்)

பொஸ்னியா—ஹர்சகோவி யாவில் மோதலை முடிவுக்கு கொண்டுவருவதற்கு வெளி நாட்டு சக்திகள் படைபலம் பிரயோகிக்க வேண்டும் என்ப தற்கு பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயர் தனது கண்ட னத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொஸ்னியா மீதான ஆயுத தடையை ஐ. நா. விலக்கிக்கொள்ள வேண்டும் என்ற இஸ்லாமிய நாடுகளின் நிலைப்பாட்டை யும் அவர் கண்டித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அவர் பேசும்போது மேலும்மக்களின் உயிர்களைப் பற்றிக் கவலைப் படாமல் கதாநாயகர்களா வது குறித்துப் பேசுவது எல் லாருக்கும் இலகுவானது ஆனால் இவ்வாறு ஈடுபடுவ தன் மூலம் மனிதாபிமான உத விகளை அங்கு மேற்கொண்டி ருக்கும் எமது படையினர் முடி வற்ற வகையில் இரத்தம் சிந் தும் சூழல் தோன்றும் என்ப தையும் சிந்திக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

## தொடர்ந்தும் நீடிக்குக

### -சட்ட அறிஞர்கள் கோரிக்கை

(கொழும்பு)

தற்காலிகமாக இணைக்கப் பட்டிருக்கும் வடக்கு-கிழக்கு இணைப்பைத் தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் என்று சட்ட மற்றும் சமூகத்துறை அறிஞர் கள் சிறிலங்கா அரசைக் கோரியுள்ளனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எம். பியான மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன் றத் தெரிவுக்குழு ஏகமனதான தீர்மானம் ஒன்றைக்காண்பத ற்கு இந்திய-இலங்கை உடன் பாட்டின் கீழான வடக்கு கிழ க்கு இணைப்பு தொடர்ந்து நீடிக்கவேண்டும் எனவும் அவ் அறிஞர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கால எல்லை யும் மேலும் நீடிக்கப்படலாம் என்று தெரிய வருகிறது.

## சிறிமாவோ ஆராய்வு

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியின் பிரதம கொறடாவான றிச்சர்ட் பத் திரானவைப் பதவி விலகக் கோரி அக்கட்சியின் நாற்பத்தி யொரு எம்.பிக்களின் விபரங் கள் பற்றி அறிய கட்சித் தலைவி சிறிமாவோபண்டார நாயக்கா முயற்சி மேற்கொ ண்டிருப்பதாகக் கூறப்படு கிறது.

## ராணுவ சம்பளப் பட்டியலில் ஊழல் மோசடி அம்பலம்

### - தந்தைக்கும் மகனுக்கும் சிறை

[கொழும்பு]

இராணுவத்தினருக்குரிய சம்பளப் பட்டுவாடா பட்டிய லில் மோசடி செய்ததாக குற் றம் சாட்டப்பட்ட கப்டன் வீரசிங்கவிற்கு ஆறு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து கொழும்பு நீதிமன்ற நீதிபதி எவ். என். டி. ஜெய சூரியா தீர்ப்பளித்துள்ளார்.

அதேவேளை குற்றவாளி யின் தந்தையான செயியஸ் வீரசிங்க திருட்டுப் பணத்தை பாதுகாத்து வைத்தமைக்காக குற்றஞ்சாட்டப்பட்டு ஒன் றரை வருட கடூழியச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள் ளார்.

நீதிபதி ஜெயசூரியா தமது தீர்ப்பில் மேலும் கூறுகையில் நன்கு திட்டமிடப்பட்ட வகையில் இவ் ஊழல் மேற் கொள்ளப்பட்டிருக்கிறது என் றும், படித்த மேல்மட்டத்தி னர் இவ்வாறான ஊழல்கள் மூலம் பெருந்தொகை பண த்தை சுருட்டிக் கொள்வது தடுக்கப்பட வேண்டும் என் றும் குறிப்பிட்டார்.

## கைவிடப்பட்ட நிலையில் ஆண்சிசு கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

உடுவில் பகுதியில் பாலத் திற்கு அடியில் ஆண் சிசு ஒன்று கைவிடப்பட்ட நிலை யில் ஒரு சிறுவனால் கண்டெ டுக்கப்பட்டுள்ளது.

இவ் ஆண் சிசுவை வயோதி பர் ஒருவர் மானிப்பாய் அர சினர் வைத்தியசாலையில் ஒப் படைத்துள்ளார்.

இதேவேளை கடந்த மாதம் மானிப்பாய் பிப்பிலி அகதி முகாமில் உள்ள பற்றையில் ஒரு ஆண் சிசு கண்டெடுக்கப் பட்டு மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் ஒப்ப டைக்கப்பட்டது வாசகர்கள் அறிந்ததே. (05)

## கொண்டாட்டம், வைபவம் ஏன் நிறுத்தப்படவேண்டும்

### - தகவல்துறை இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

வடக்கிலும், கிழக்கிலும் ஒரு குழுவினருக்கெதிராக இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது என் பதற்காக வைபவங்களும், கொண்டாட்டங்களும் ஏன் இடை நிறுத்தப்பட வேண்டும் என்று தகவல்துறை இராஜா ங்க அமைச்சர் ஏ. ஜே. ரண சிங்ககேள்வி எழுப்பியுள்ளார்.

இகல பொமிரியா கனிஷ்ட பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், இத் தகைய வைபவங்கள் கூட ஒரு வகையில் படையினரை உற்சாகப்படுத்துவதாக இருக் கிறது எனவும், எல்லாளனு டன் சண்டையில் ஈடுபட்டி ருக்கும்போது துட்டகைமுனு வும் இவ்வாறு செயற்பட் டான் எனவும் அவர் தெரிவித் தார்.

அத்துடன் வருமானம் குறைந்த பிரிவினரின் வீடு களில் நடக்கும் மரணச்சடங் குகளுக்காக ரூபா ஆயிரம் நன்கொடை வழங்குவது பற் றித் தான் திட்டமிட்டு வரு வதாகவும் குறிப்பிட்டார்.

ஈழநாதம்

## மீண்டும் நிவாரண விநியோகம்

(வடமராட்சி)

ஆத்தியடியில் இயங்கும் பருத்தித்துறை இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளை இடைநிறுத்தி வைத்திருந்த நிவாரணத்தை மீண்டும் வழங்க ஆரம்பித்துள்ளது.

இராணுவ நடவடிக்கைகளால் இறந்தவர்கள், காணாமல் போனவர்கள், ஐம்பது வீதத்துக்கு மேல் காயமடைந்தவர்களுக்கே இந் நிவாரணத்தை வழங்குகிறது. [யோ]

## நூலகப் பிரிவு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம் தனது சங்க பண்டபத்தில் அண்மையில் நூலகப் பிரிவு ஒன்றை ஆரம்பித்துள்ளது. [88]

## சீனி விநியோகம்

[யாழ்ப்பாணம்]

வேலணை ப.நோ கூ. சங்கம் தனது எல்லைப் பரப்பிற்குட்பட்ட "உ" அட்டை வைத்திருப்பவர்களிற்கு இன்று தொடக்கம் அட்டை ஒன்றிற்கு இரண்டு கிலோ சீனி ஒரு கிலோ 27 ரூபா 75சத வீதம் அதன் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள மக்கள் கடை மூலம் வழங்கவிருக்கிறது. இதை அதன் பொதுமுகாமையாளர் தெரிவித்தார். [88]

## ஜனாதிபதி பிரேமதாசா பங்களாதேஷ் செல்வார்

(கொழும்பு)

"சார்க்" நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவும் அவரது பாரியாரும் இம்மாதம் 11ஆம் திகதி மாலை விமானமூலம் டாக்காவுக்குப் புறப்பட்டுச் செல்ல உள்ளனர்.

## தென்பகுதி மீனவருக்கு விசேட பாஸ்

ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்வோருக்கென விசேட உத்தரவாதப் பத்திரம் வழங்கப்படவுள்ளது.

இத்தகவலை கடந்த புதன் கிழமை கடற்றொழில் நீர் வளத்துறை அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அமைச்சர் இந்த உத்தரவாதப் பத்திரம் மூலம் சர்வதேச கடல் எல்லைக்குள் மீனவர்கள் சென்று மீன் பிடிக்க முடியும் எனக் கூறினார்.

## நியூசிலாந்து செல்ல இலங்கையருக்கு விசாமறுப்பு

(கொழும்பு)

நியூசிலாந்து அரசாங்கம் இலங்கையர்களுக்கு விசா வழங்குவதை இடை நிறுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பான விளக்கத்தை அளிக்கும்படி சிங்கப்பூர் மற்றும் அவுஸ்திரேலியாவிற்கு வெளிவிவகார அமைச்சு அவசரக் கேபிள் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளது.

வெளிவிவகார அமைச்சக அதிகாரி ஒருவர் இது தொடர்பாக கூறுகையில் கன்பராவில் இருக்கும் சிறிலங்கா தூதுவருக்கும், சிங்கப்பூரில் இருக்கும் நியூசிலாந்து தூதுவருக்கும் இக் கேபிள் செய்தி அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தி உண்மையானது என்று உறுதிப்படுத்தப்படுமானால் வெளிவிவகார அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிக்கை ஒன்றை வெளியிடும் என்றும் கூறப்படுகிறது.

குறைந்த விலை! நிறைந்த சேவை!

நத்தார் வாழ்த்துக்கள்
புதுவருட வாழ்த்துக்கள்
மெய்கண்டான் நாட்காட்டிகள்
டயறிகள்

இவற்றினை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்கட்கு
கழிவு வழங்கப்படும்.

### கிழக்கில்

துடன் பிறமாவட்டங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையிலான விசேட அதிரடிப் படையினர் அம்மாவட்டங்களுக்கு அதிக எண்ணிக்கையில் அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் எந்த நேரத்திலும் தமது நிலைகள் மீது தாக்குதல் நடத்தக் கூடும் என்ற அச்சம் காரணமாகவே சிறிலங்கா இராணுவத்தினர் இந் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக மட்டக்களப்பு காத்தான்குடியில் பெருமளவு படைகள் குவிக்கப்பட்டுள்ள

## "மெரினால்" மன்னார் செல்கிறது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் உணவுப் பொருள்களை இறக்குவதற்கென தயார்நிலையில் இருந்த "மெரினால்" கப்பல் மன்னாருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒருவாரமாக காங்கேசன்துறை உணவுக்களஞ்சியத்தில் உணவுப்பொருள்களை ஏற்றி முடிந்தநிலையில் தரித்து நின்ற இந்தக்கப்பல் மன்னார் நோக்கிப் புறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (பா)

## 34பேர் மட்டுமே தமிழர்

(கொழும்பு)

கேகாலை மாவட்டத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் இதுவரை சுமார் 2040 பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றனர். இவர்களில் சுமார் 34பேர் மட்டுமே தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# பள்ளிவாசல் பிரதம மதகுரு வீட்டிற்கு கைக்குண்டு வீச்சு

(கல்முனை)

கல்முனையில் பள்ளிவாசல் குருமாருக்கும் முஸ்லிம் இளைஞர்களுக்கும் இடையே ஏற்பட்டிருந்த கருத்து முரண்பாட்டினால் கல்முனை ஜும்மா பள்ளிவாசல் பிரதம மதகுரு வீட்டிற்கு கைக்குண்டு வீசப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பள்ளிவாசல் பிரதம மதகுரு வீடு பலத்த சேதத்திற்கு உள்ளாகியது. இச்சம்பவத்தில் எவரும் காயம் அடையவில்லை.

அண்மைக் காலமாக பள்ளிவாசல் மதகுருமாருக்கும் முஸ்லிம் இளைஞர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் பலமடைந்து வருவதாகவும் இதனாலேயே இக்குண்டு வீச்சு நிகழ்ந்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாம்.

## மரக்கன்றுகள் விநியோகம்

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச செயலகம் மரக் கன்றுகளை இலவசமாகவழங்கி வருகிறது.

மலை வேம்பு, வேம்பு, தேக்கு, இப்பில் இப்பில். சவுக்கு ஆகிய மரக்கன்றுகள் சனசமூக நிலையங்களூடாக வழங்கப்பட்டு வருகின்றன.

இவற்றை பெற விரும்புவோர் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்படுகிறது. [யோ]

## அடகு நகைகளைப்பெற உடன் தொடர்பு கொள்க

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மன்னார், முருங்கன் மக்கள் வங்கிக் கிளைகளில் இராணுவ நடவடிக்கையினால் தொலைந்த நகைகளுக்கு இதுவரை நட்டஈடு பெறாதவர்களும் நகைகளை மீளப்பெறுவதற்குப் பணத்தைச் செலுத்தியவர்களும், செலுத்தாதவர்களும் உடனடியாக மன்னார் கிளை முகாமையாளருடன் நேரிலோ அன்றி கடிதமூலமோ தொடர்பு கொள்ளுமாறு பிராந்திய மக்கள் வங்கி முகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுவரை சுமார் 700க்கு மேற்பட்ட வாடிக்கையாளர்கள் இந்த நகை தொடர்பாகத் தம்மிடம் தொடர்பு கொள்ளவில்லை என்றும் எனவே தகுந்த ஆதாரங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்

மன்னார் மக்கள் வங்கி முகாமையாளரின் சிபார்சின் பின்னரே கொழும்பு வங்கியில் இவற்றைப் பெற முடியும் என்றும். எனவே உடனடியாக மன்னார் வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கூறினார்.

# கடற்படைக்கு ஆள்திரட்ட அரசாங்கம் பெரு முயற்சி

(கொழும்பு)

கடற்படைக்கு ஆள் திரட்டும் முயற்சியில் சிறிலங்கா அரசாங்கம் இறங்கியுள்ளது கடற்படையில் தொழில்நுட்ப வேலைகள் உட்பட பத்துக்கு மேற்பட்ட பதவிகளுக்கு ஆள் திரட்ட நேர்முகப் பரீட்சைகளை நடாத்த இருப்பதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கடற்படையிலிருந்து அண்மைக்காலங்களில் பலர் விலகிச் செல்வதால் பெருமளவு வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### பரீட்சை

மேரிஸ் வித்தியாலயத்திற்கும், யாழ். கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலை, யாழ். நல்லூர் இந்து பெண்கள் பாடசாலைக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. [பா]

### க. பொ. த.

பரீட்சை நடைபெறுகின்றது. இதற்கான சகல ஒழுங்குகளையும் யாழ். கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது என யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [பா]

### உத்தரப்பிரதேச

தது என்றும்.

மாநில அரசு பள்ளிவாசலின் பாதுகாப்புக்கு உச்ச நீதிமன்றத்திடமும், மத்திய அரசுக்கும் உறுதிமொழி அளித்தது

### இந்தியாவின்

தலைக்கப்பட்டுள்ளது.

ராமர் ஆலயக் கட்டுமானப் பணியை மேற்கொள்ள நான்கு லட்சத்துக்கும் அதிகமான இந்துக்கள் அயோத்தியில் கூடியிருந்தனர். ஆலயக் கட்டுமானப் பணியை ஆரம்பிப்பதற்கு சுமார் பதினைந்து நிமிடத்திற்கு முன்னர் அங்கு கூடியிருந்த இளைஞர் சிலர் தடைகளைத் தாண்டி, பாபர் மசூதியில் ஏறி காவி வண்ணக் கொடியை ஏற்றினர். வாள், கத்தி, சங்குகள் சகிதம் தொண்டர்கள் பொலிசாரைத் தாக்கியதாகவும் கூறப்படுகிறது பின்பு மசூதியை இடிக்கும் வேளையில் ஈடுபட்டனர். அவர்களைப் படம் எடுக்க முயன்ற செய்தியாளரும் தாக்கப்பட்டார்.

இதே வேளை பொலிஸார் இந்து மத அடிப்படைவாத இளைஞரைத் தடுத்து நிறுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் பள்ளிவாசல் பகுதியிலிருந்து அணிவகுத்து வெளியேறிச் சென்றனர். அயோத்தி வீதிகளில் "இராம பிரான் வாழ்க" என்ற கோஷமெழுப்பிய மக்களுடன் சேர்ந்து பொலிஸா

### வட - கிழக்கு நிலைமை

## கன்ரபரி மேற்றிராணியார் நேரில் பார்வையிடுவார்

[கொழும்பு]

வடக்குகிழக்குநிலைமைகளை பார்வையிட தாம் மீண்டும் இலங்கை வரவுள்ளதாக உலக அங்கிலிக்கன் கன்ரபரி அதி மேற்றிராணியார் வணக்கத்துக்குரிய ஜோர்ஜ் லியோனார்டகேரி தெரிவித்துள்ளார்.

கொழும்பு பங்கு அங்கிலிக்கன்மேற்றிராணியாராகவணக்கத்திற்குரிய ஹோரத் பர்னாண்டோவை திருநிலைப்படுத்தும் வைபவத்தில் பேசும் போது அவர் இவ்வாறு கூறினார்.

நேற்றுக் காலை இத் திருநிலைப்படுத்தும் வைபவம் இடம்பெற்றது.

### பேச்சுவார்த்தை

ஏ. எவ். பி. செய்தியாளரிடம் அவர் தெரிவித்ததாக அச் செய்தி மேலும் தெரிவித்தது.

சமீப காலங்களில் இராணுவத்தை பல இடங்களில் தோற்கடித்தபின் தாம் இந்த கோரிக்கைகளை முன்வைப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## மாதாந்த உதவிப் பணம்

(வடமராட்சி)

கரவெட்டி பிரதேச செயலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கு நவம்பர் மாத உதவிப் பணம் வழங்கப்பட்டு வருகிறது. [யோ]

## மரண அறிவித்தல்

யாளர் தெரிவித்தார். [88] பாக கூறுகையில் கன்பராவில

குறைந்த விலை! நிறைந்த சேவை!

## நத்தார் வாழ்த்துக்கள்
## புதுவருட வாழ்த்துக்கள்
## மெய்கண்டான் நாட்காட்டிகள்
## டயறிகள்

இவற்றினை

மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்கட்கு கழிவு வழங்கப்படும்.

மற்றும்

பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை சகலவிதமான புத்தகங்ளையும் கொள்வனவு செய்ய

நாடவேண்டிய ஒரே இடம்

**தமிழ்த்தாய் புத்தகசாலை**

191, மின்சாரநிலைய வீதி,
(பஸ்நிலைய அருகாமை)
யாழ்ப்பாணம்.

(3227)

## நன்றி நவில்கிறோம்

## அமரர் ரி. பி. பத்மநாதன்

எமது அன்புத்தெய்வமாய் ஒளிவீசி வாழ்ந்த குடும்பத்தலைவன் அமரர் ரி. பி. பத்மநாதன் அவர்கள் 06-11-92இல் சிவபதமடைந்தபோது அவரது இறுதிக் கிரியைகளில் தாமாகவே முன்னின்று பலவழிகளிலும் உதவிபுரிந்த யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கிறாஸ்கொப்பேர்ஸ் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் மற்றும் ஏனைய விளையாட்டுக்கழகத்தினர், அத்துடன் மலர்வளையம், மலர்மாலை சாத்தி அஞ்சலி செலுத்தியோர், இரங்கலுரை நிகழ்த்தியோர், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

06-12-92இல் எமது இல்லத்தில் நிகழ்ந்த 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிரியைகளிலும் மதியபோசன விருந்திலும் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளை தெரிவிக்கிறோம்.

இங்ஙனம்
அன்பு மனைவி பிள்ளைகள்,
மருமகன்

(சி-5539)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கிழக்கில்

துடன் பிறமாவட்டங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையிலான விசேட அதிரடிப் படையினர் அம்மாவட்டங்களுக்கு அதிக எண்ணிக்கையில் அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் எந்த நேரத்திலும் தமது நிலைகள் மீது தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சம் காரணமாகவே சிறிலங்கா இராணுவத்தினர் இந் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக மட்டக்களப்பு காத்தான்குடியில் பெருமளவு படைகள் குவிக்கப்பட்டுள்ளதுடன் அதிகஎண்ணிக்கையான கவசவாகனங்களும் பீரங்கிகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இப்பகுதியில் இராணுவ நடவடிக்கை தீவிரப்படுத்தப்படஉள்ளதாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துளளன.

யாழ். கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலை, யாழ். நல்லூர் இந்து பெண்கள் பாடசாலைக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. [பா]

க. பொ. த.

பரீட்சை நடைபெறுகின்றது. இதற்கான சகல ஒழுங்குகளையும் யாழ். கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது என யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [பா]

உத்தரப்பிரதேச

தது என்றும்.

மாநிலஅரசு பள்ளிவாசலின் பாதுகாப்புக்கு உச்ச நீதிமன்றத்திடமும், மத்திய அரசுக்கும் உறுதிமொழி அளித்ததாகவும் அமைச்சர் கூறினார். கல்யாண் சிங் அரசு பதவி விலகியது பாரதீய ஜனதாக் கட்சியின் அரசியல்தந்திரம் எனகூறிய அவர்பள்ளிவாசலுக்குப்பாதுகாப்பு வழங்க முடியாதிருந்தால் அவர் முன்னமே தெரிவித்திருக்கவேண்டும்என்றார்.

மசூதியில் ஏறி காவி வண்ணக் கொடியை ஏற்றினர். வாள், கத்தி, சங்குகள் சகிதம் தொண்டர்கள்பொலிசாரைத் தாக்கியதாகவும் கூறப்படுகிறது பின்பு மசூதியை இடிக்கும் வேலையில் ஈடுபட்டனர். அவர்களைப் படம் எடுக்க முயன்ற செய்தியாளரும் தாக்கப்பட்டார்.

இதே வேளை பொலிஸார் இந்து மத அடிப்படைவாத இளைஞரைத் தடுத்து நிறுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் பள்ளிவாசல் பகுதியிலிருந்து அணிவகுத்து வெளியேறிச் சென்றனர். அயோத்தி வீதிகளில் ''இராம பிரான் வாழ்க'' என்ற கோஷமெழுப்பிய மக்களுடன் சேர்ந்து பொலிஸாரும் கோஷமிட்டனர்.

மசூதி இடிக்கப்பட்டு மூன்று மணி நேரத்துக்குப் பிறகு மத்திய அரசினால் 13,000 பரா இராணுவப் பொலிஸ் அயோத்திக்கு அனுப்பப்பட்டது. இவர்களால் மக்களின் தடையைத் தாண்டி முன்னேற முடியவில்லை.

நேற்று இருள் கவியும் நேரத்தில் மசூதி முற்றாகத் தகர்க்கப்பட்டது.

விஷ்வ ஹிந்து பரிசத்தடையை மீறியிருபபது இந்தியா முழுவதும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவின் பல பகுதிகளில் இந்து முஸ்லிம் கலவரம் வெடிக்கும் என அஞ்சப்படுகிறது.

நேற்றைய ராமர் ஆலயக் கட்டுமானப் பணியில் சேர்ந்து கொள்ள இந்தியாவின் முக்கிய எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் முக்கிய மூன்று தலைவர்களான எல். கே அத்வானி, எம். எல். ஜோசி, வாஜ்பாய் ஆகியோரும் அயோததி சென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

உத்தரப் பிரதேசத்தில் பல நகரங்களில் ஊரடங்கு பிரகடனப்படுத்தப்பட்டுள் ளது. கேரளம், மத்திய பிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்கள் உள்ளிட இந்திய மாநிலங்கள் அனைத்திலும் படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

டில்லியில் கண்டவுடன் சுடும் 144 ஏ சட்டம் பிரகடனப் படுத்தப் பட்டுள்ளது. பொலிசும், படைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

பழைய

யாகும் எனப் பரீட்சை ஆணையாளருக்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் சுட்டிக்காட்டி இவ்வினப் பாகுபாடான நடவடிக்கையை உடன் நீக்குமாறு கோரியுள்ளார்.

பார்வையிட தாம் மீண்டும் இலங்கை வரவுள்ளதாக உலக ஆங்கிலிக்கன் கன்ரபரி அதிமேற்றிராணியார் வணக்கத்துக்குரிய ஜோர்ஜ் லியோனார்டகேரி தெரிவித்துள்ளார்.

கொழும்பு பங்கு ஆங்கிலிக்கன்மேற்றிராணியாராகவணக்

பேச்சுவார்த்தை

ஏ. எவ். பி. செய்தியாளரிடம் அவர் தெரிவித்ததாக அச் செய்தி மேலும் தெரிவித்தது.

சமீப காலங்களில் இராணுவத்தை பல இடங்களில் தோற்கடித்தபின் தாம் இந்த கோரிக்கைகளை முன்வைப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வைபவத்தில் பேசும் போது அவர் இவ்வாறு கூறினார்.

நேற்றுக் காலை இத் திருநிலைப்படுத்தும் வைபவம் இடம்பெற்றது.

## மாதாந்த உதவிப் பணம்

(வடமராட்சி)

கரவெட்டி பிரதேச செயலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கு நவம்பர் மாத உதவிப் பணம் வழங்கப்பட்டு வருகிறது. [யோ]

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
## 1993 ஆண்டு 6 அனுமதி

(1992ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை அடிப்படையில்)

1992 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திஎய்திய மாணவர்களுக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் 1993-ம் ஆண்டுக்குரிய ஆண்டு 6 வகுப்பில் அனுமதி வழங்கப்படவுள்ளது.

இவ்வனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தைக் கல்லூரி அலுவலக வேலைநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம் பெறவரும்போது, புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை அதிபரிடமிருந்து மாணவனின் புலமைப்பரிசில் புள்ளி, மாணவனின் சுட்டிலக்கம் என்பவற்றையும் உறுதிப்படுத்தி வருமாறு வேண்டப்படுகிறார்கள்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 23-12-1992**

அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

05-12-1992
(சி-5544)

## விற்பனை முகவர் தேவை

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய இடங்களிற்கு புத்தகம் கொண்டு சென்று விற்பதற்கு ஆட்கள் தேவைப்படுகின்றது.

கொமிஷன் வழங்கப்படும்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி;

**தமிழ்த்தாய் புத்தகசாலை**

191, மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலைய அருகாமை)
யாழ்ப்பாணம்.

(3226)

## மரண அறிவித்தல்

## அருளப்பு திரேசம்மா

பிறப்பு: 29-10-1929 இறப்பு: 06-12-1992

மாரீசன்கூடல், இளவாலையைச் சேர்ந்த திரேசம்மா காலமானார் இவர் அருளப்புவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லமுத்துவின் சகோதரியும், ராசாத்தி, அன்பு (கனடா), றதி, றூபி, சித்திரா (ஜேர்மனி), கலா, நிலா ஆகியோரின் தாயாரும், துரை, விஜி, அருள்தாஸ் டக்ளஸ், விஜயன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், குமார் (கனடா), றஜனி, சுமன், அஜன், சுதன், வினோ, டாறியா, லாவுறா, கியூமன், கிஷோதன், மயூறன், நிரோஷன், யெறூஷன், மதுஷா (ஜேர்மனி) ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

இவரின் பூதவுடல் ஆனை கோட்டை, வேளாங்கண்ணி வீதியிலுள்ள இல்லத்திலிருந்து இன்று பிற்பகல் 2 மணியளவில் ஆனைக்கோட்டை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
கணவன், பிள்ளைகள்

[3761]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**06.12.92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6971

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

43-2666, 42-1320, 24-7356, 41-9659, 28-3333,
26-1349, 24-9205, 24 9396, 24-5623, 27-1122,
26-5576, 40-1079, 26-1376, 27-5845, 26-1169,
41-6686, 26-5870, 26-2510, 22-3887, 72-0058,
25-9535, 26-0777, 28-2854, 26-4510, 24-5140,
28-4183.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-8051, 41-5605, 24-6972, 24-8424, 42-3267,
26-0382, 24-49[illegible]8, 28-8951, 42-1721, 26-5962,
42-9325, 27-9052, 26 0525, 26.8223, 41-8432,
21-9779, 26-4882, 42-0526, 43-517, 43-1062,
27-5823, 41-9032, 24-5969, 41-5178, 22-8855.